**டிசம்பர் – 01**

# TNPSC துளிகள்

- முதலீடு, இளைஞர் வேலைவாய்ப்பு மற்றும் குடியுரிமை பெறாத இந்தியர்களின் நலன் ஆகியவற்றிற்காக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளில் கவனம் செலுத்துவதற்காக 'வெளிநாட்டு ஒத்துழைப்புத் துறை' என்ற ஒரு புதிய துறையை உருவாக்க ஹரியானா மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான ஹாக்கி புரோ லீக்கின் போது இந்தியாவின் உள்நாட்டில் நடக்கும் போட்டிகளை புவனேஸ்வரில் நடத்தப் போவதாக சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு (International Hockey Federation - FIH) அறிவித்துள்ளது. இந்தியாவில் ஹாக்கி மையமாக புவனேஸ்வர் உருவெடுத்துள்ளது.
- மைக்ரோசாப்ட் மென்பொருள் நிறுவனமானது தனது "K - 12 கல்வி மாற்றக் கட்டமைப்பை" அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஊழலை எதிர்த்து செயல்பட ஆந்திர மாநில அரசு அகமதாபாத் இந்திய மேலாண்மை நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்கள் இரவு நேரங்களில் (மாலை 7 மணி முதல் காலை 6 மணி வரை) வேலை செய்ய கர்நாடக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
- தமிழக பொது விநியோகம் தொடர்பான புலனாய்வுத் துறையைச் சேர்ந்த காவல்துறை இயக்குனரான பிரதீப் வி. பிலிப் என்பவர் "ஸ்கோச் ஆர்டர் ஆஃப் மெரிட்" என்ற தகுதியைப் பெற உள்ளார். 1993 ஆம் ஆண்டு "சமூகக் காவல் துறை – காவல் துறை நண்பர்கள்" மற்றும் "ஸ்மார்ட் போலிஸிங் - உங்கள் குற்றவாளியை அறிந்து கொள்ளுங்கள்" என்ற பிரிவுகளின் கீழ் இவர் இந்த இரண்டுத் திட்டங்களை வழங்கினார்.
- மொரீஷியஸ் நாட்டின் தற்போதைய பிரதமரான பிரவிந்த் ஜுக்னாத் மீண்டும் ஐந்தாண்டு காலத்திற்குப் பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.
- சுதர்சன் சக்ரா படைப்பிரிவு என்று அழைக்கப்படுகின்ற இந்திய இராணுவத்தின் பாதுகாப்புப் படைப் பிரிவானது அதன் வருடாந்திரப் பயிற்சியான சிந்து சுதர்சன்- VII என்ற பயிற்சியை ராஜஸ்தானின் உள்ள பார்மரில் நடத்தியது.
- வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தின் விதிமுறைகளை மீறியதற்காக இந்தியாவில் உள்ள சுமார் 1,800 அரசு சாரா நிறுவனங்கள் வெளிநாட்டு நிதியைப் பெறத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
    - இந்தியாவிற்கான வெளிநாட்டுப் பங்களிப்புகள் ஆனது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 2010 ஆம் ஆண்டு வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன.


# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் சாலை விபத்துக்கள் - 2018

- 2018 ஆம் ஆண்டில் நடந்த சாலை விபத்துகளின் அடிப்படையில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், தமிழகத்தில் அதிக எண்ணிக்கையிலான சாலை விபத்துக்கள்

பதிவாகியுள்ளன. உத்தரப் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் சாலை விபத்துக்களில் இறந்துள்ளனர்.

- உலகில் விபத்து தொடர்பான இறப்புகளில் கிட்டத்தட்ட 11% இந்தியாவில் உள்ளது.




## இந்திய நகர்ப்புறப் போக்குவரத்து மாநாடு & கண்காட்சி - 2019

- 2019 ஆம் ஆண்டின் இந்திய நகர்ப்புறப் போக்குவரத்து மாநாடு மற்றும் கண்காட்சியின் 12வது பதிப்பானது உத்தரப் பிரதேசத்தின் தலைநகரான லக்னோவில் நடைபெற்றது.
- மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் உள்ள தொழில்முறை அமைப்பான நகர்ப்புறப் போக்குவரத்து நிறுவனம் இதை ஏற்பாடு செய்தது.
- இம்மாநாட்டின் இந்த ஆண்டிற்கான கருப்பொருள் “அணுகக்கூடிய மற்றும் வாழக்கூடிய நகரங்கள்” என்பதாகும்.
- இது மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் உதவியுடன் ஏற்பாடு செய்யப்படும் வருடாந்திர முதன்மை நிகழ்வாகும்.
- 2006 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தின் தேசிய நகர்ப்புறப் போக்குவரத்துக் கொள்கையின் படி இது தோற்றுவிக்கப்பட்டது.




# சர்வதேசச் செய்திகள்

## உலகளாவிய இணையவழிக் குற்றம் தொடர்பான தீர்மானம்

- உலகளாவிய இணையவழிக் குற்றம் தொடர்பாக ரஷ்யா தலைமையிலான ஒரு தீர்மானத்தை ஐ.நா குழு நிறைவேற்றியுள்ளது.
- இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான இறுதி பொதுச் சபை வாக்கெடுப்பானது டிசம்பர் மாதத்தில் நடைபெற உள்ளது.
- அமெரிக்கா தலைமையிலான புடாபெஸ்ட் மாநாட்டிற்கு மாற்றாக இந்த ஒப்பந்தம் முன்மொழியப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தீர்மானத்திற்கு சீனா, வட கொரியா, கியூபா, நிகர்குவா, வெனிசுலா மற்றும் சிரியா ஆகிய நாடுகள் நிதியுதவி அளித்துள்ளன.
- ரஷ்யா தலைமையிலான இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியாவும் வாக்களிக்கின்றது.
- ஐரோப்பா தலைமையிலான புடாபெஸ்ட் மாநாட்டில் உறுப்பினர் அல்லாதவர் என்ற வகையில் இந்தியா தனது நிலைப்பாட்டை நிலைநிறுத்தியுள்ளது.

*புடாபெஸ்ட் மாநாடு பற்றி*

- இணையவழிக் குற்றம் தொடர்பான புடாபெஸ்ட் மாநாடு அல்லது 2001 ஆம் ஆண்டு புடாபெஸ்ட் மாநாடு என்று அழைக்கப்படும் இணையவழிக் குற்றம் குறித்த மாநாடானது இணையம் மற்றும் கணினி வழிக் குற்றங்களை நிவர்த்தி செய்ய முற்படும் முதலாவது சர்வதேச ஒப்பந்தமாகும்.
- இது 2004 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
- இது பிரான்சில் உள்ள ஐரோப்பிய மன்றத்தால் வரையறுக்கப்பட்டது.
- ஐரோப்பிய மன்றத்தின் பார்வையாளர் நாடுகளான கனடா, ஜப்பான், தென்னாப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா ஆகியவை பங்கேற்பதன் மூலம் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

- ஐரோப்பிய மன்றத்தில் உறுப்பினர்களாக இல்லாத நாடுகளுக்குக் கூட இது ஒப்புதல் அளிக்கும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது.

### WCO RCP கூட்டம்

- இந்தியாவானது உலக சுங்க அமைப்பு (WCO - World Customs Organization) ஆசிய பசிபிக் பிராந்தியத் தொடர்பு மையங்களுக்கான மாநாட்டைப் புதுச்சேரியில் நடத்தியது.
- இந்த மாநாடானது இந்தியாவில் நான்காவது முறையாக நடந்துள்ளது. முன்னதாக இது ஜெய்ப்பூர் மற்றும் கொச்சினில் நடைபெற்றது.
- உலக சுங்க அமைப்பு என்பது ஒரு அரசாங்கங்களுக்கிடையேயான, குறிப்பாக எல்லை தாண்டிய நடைமுறைகள் மற்றும் பழக்க வழக்கங்களுக்கான கொள்கைகளையும் தரங்களையும் அமைப்பதில் ஈடுபட்டுள்ள அமைப்பாகும்.
- WCO அமைப்பின் தலைமையகம் பிரஸ்ஸல்ஸில் அமைந்துள்ளது.

## பொருளாதாரச் செய்திகள்

### IRCTCயின் வருவாய் இரு மடங்காக உயர்வு

- இந்திய ரயில்வே உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகத்தின் வருவாயானது கிட்டத்தட்ட இரு மடங்காக உயர்ந்துள்ளது.
- IRCTC ஆனது 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் தேதியில் பங்குச் சந்தையில் நுழைந்த பின்னர் அதன் வருவாயை வெளியிடுவது இதுவே முதல் முறையாகும்.
- IRCTC ஆனது இந்திய ரயில்வேயின் பிரத்யேக மின்னணுப் பயணச்சீட்டு வழங்கும் பங்காளர் அமைப்பாகும்.
- இது இந்திய ரயில்வேயின் துணை நிறுவனமாகும்.
- இது இந்தியாவின் மினி ரத்னா நிறுவனங்களில் ஒன்றாகும்.

### 2019 ஆம் ஆண்டின் பிம் (BHIM) - சிங்கப்பூர் ஃபின்டெக் விழா 2019

- 2019 ஆம் ஆண்டிற்கான சிங்கப்பூர் ஃபின்டெக் விழாவில் BHIM UPI QR-அடிப்படையிலான கொடுப்பனவுகளின் உலகளாவிய சோதனை நடத்தப்பட்டது.
- BHIM செயலியானது சர்வதேச அளவில் சிறப்பிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்த விரைவு எதிர்வினைக் குறியீடு (Quick Response Code – QR Code) அடிப்படையிலான அமைப்பானது BHIM செயலியைப் பயன்படுத்தும் எவரும் சிங்கப்பூரில் உள்ள நெட்ஸ் முனையங்களில் சிங்கப்பூர் விரைவு மறுமொழி குறியீட்டை (SGQR) ஸ்கேன் செய்ய அனுமதிக்கும்.
- இந்தத் திட்டத்தை இந்திய தேசியக் கொடுப்பனவு கழகம் (National Payments Corporation of India - NPCI) மற்றும் சிங்கப்பூரின் மின்னணுப் பணப் பரிமாற்றங்களுக்கான வலையமைப்பு ஆகிய அமைப்புகள் இணைந்து உருவாக்கி வருகின்றன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஹயாபுசா 2 - ஜாக்ஸா

- ஜப்பானின் ஆளில்லா ஹயாபுசா 2 விண்கலமானது 250 மில்லியன் கி.மீ தொலைவு கொண்ட ரியுகு என்ற குறுங்கோள் பயணத்தை முடித்த பின்னர் பூமிக்குத் திரும்ப இருக்கின்றது.
- ஹயாபுசா 2 விண்கலமானது 2020 ஆம் ஆண்டு இறுதிக்குள் பூமிக்குத் திரும்ப திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த விண்கலத்தின் பூமிக்குத் திரும்பும் பயணம் வெற்றிகரமாக முடிந்தால், குறுங்கோளின் மேற்பரப்பில் இருந்து மாதிரிகளை சேகரித்துக் கொண்டு பூமிக்குத் திரும்பிய முதலாவது விண்கலப் பயணமாக உருவெடுக்க இருக்கின்றது.
- சூரிய மண்டலத்தின் விடியற் காலையில் குறுங்கோள்கள் உருவாகியதாக நம்பப்படுகின்றது.
- ரியுகு என்ற குறுங்கோளானது பூமியில் வாழ்விற்கு பங்களிக்கக்கூடிய கரிமப்பொருட்களைக் கொண்டிருக்கலாம்.

## காகித அடிப்படையிலான உணர்வி

- குவஹாத்தி இந்தியத் தொழில்நுட்ப நிறுவன ஆராய்ச்சியாளர்கள், பாலின் தூய்மைத் தன்மையை உடனடியாக சரிபார்க்க காகித அடிப்படையிலான உணர்வி ஒன்றை உருவாக்கியுள்ளனர்.
- இந்த ஆராய்ச்சியானது உயிரி உணர்விகள் மற்றும் உயிரி மின்னியல் இதழில் பிரஞ்சல் சந்திரா என்பவரது தலைமையிலான குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளது.
- பாலில் உள்ள நுண்ணுயிரிகளின் ஆக்கிரமிப்பு மற்றும் இருப்பு ஆகியவற்றால் பாலின் தரம் மற்றும் தூய்மைத் தன்மை தீர்மானிக்கப் படுகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஜெர்மனி – காலநிலைச் சட்டம்

- ஜெர்மன் பாராளுமன்றமான பன்டெஸ்டாக் ஆனது 2030 ஆண்டுக்குள் அதன் காலநிலை இலக்கை எட்டும் முயற்சியாக காலநிலைப் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.
- இது ஜெர்மனியின் முதலாவது காலநிலை நடவடிக்கைச் சட்டமாகும்.

### *தாக்கம்*

- 2021 முதல், நாட்டில் டீசல் மற்றும் பெட்ரோல், வெப்பமூட்டும் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு போன்றவற்றை சந்தைப்படுத்தும் நிறுவனங்கள், தாங்கள் வெளியிடும் பசுமை இல்ல வாயுக்களின் அளவிற்கு மாசுபடுத்தும் உரிமையைப் பெற வேண்டும்.
- மேலும், இனி உள்நாட்டிலும் ஐரோப்பாவிலும் விமானப் போக்குவரத்து அதிக செலவு கொண்டதாக இருக்கும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## "மனிதநேயத்திற்காக இந்தியா" முன்னெடுப்பு – ஜெய்ப்பூர் காலனி

- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் இந்த நிகழ்வு சமீபத்தில் அமெரிக்காவின் கேபிடல் கட்டிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் 2018 ஆம் ஆண்டு அக்டோபரில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் ஆனது "மனிதநேயத்திற்காக இந்தியா" என்ற முன்முயற்சியை அறிமுகப்படுத்தியது.
- இதன் கீழ், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் நிதி உதவியுடன் கூடிய திட்டங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட பல்வேறு நாடுகளில் செயற்கை மூட்டுப் பொருத்துதல் முகாம்கள் நடத்தப்படுகின்றன.
- இந்த முன்முயற்சிக்காக, ஜெய்ப்பூர் காலணியின் பெற்றோர் அமைப்பான புகழ்பெற்ற தொண்டு நிறுவனமான பகவான் மகாவீர் விக்லாங் சஹாயதா சமிதி (BMVSS) உடன் MEA ஒத்துழைத்துள்ளது.




***BMVSS பற்றி***

- இது 1975 ஆம் ஆண்டில் தேவேந்திர ராஜ் மேத்தாவால் நிறுவப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்பாகும்.
- இந்நிறுவனத்தின் வர்த்தக முத்திரை உறுப்புகளில் 'ஜெய்ப்பூர் காலணியானது' பிரபலமாக அறியப்படுகின்றது.
- செயற்கை மூட்டு, இடுக்கிகள் மற்றும் பிற உபகரணங்களை மாற்றுத்திறன் கொண்டவர்களுக்குப் பொருத்துகின்ற உலகின் மிகப்பெரிய இலாப நோக்கற்ற அமைப்பு இதுவாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★